Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.270/2024

Dated 16-03-2026
Deposition of witness for : PW 5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரவணவேல் | வயது | : | 44 |
| தந்தை பெயர் | : | ஆனந்தவேல் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தொழில் | : | மருத்துவர் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused1,2 absent 355 BNSS Petition filed and allowed.**

Ld.D. **Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது மீனாட்சி மருத்துவமனையில் அவசர சிசிச்சை பிரிவில் துறை தலைவராக பணிபுரிகிறேன்.

2) கடந்த 25.2.2022 அன்று இரவு 9.30 மணியளவில் என்னுடன் பணிபுரிந்த டாக்டர் ஷோபனா பணியில் இருந்தபோது அச்சுனன் என்னும் 27 வயது மதிக்க தக்க நபரை வினோதினி அச்சுனன் என்பவர் மேல் சிகிச்சைக்காக எங்கள் மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்.

3) டாக்டர் ஷோபனா அவர்களின் கையெழுத்து எனக்கு நன்கு தெரியும். அவர் தற்போது மீனாட்சி

மருத்துவமனையில் பணியில் இல்லாத காரணத்தினால் அவர் எழுதிய விபத்து பதிவேட்டின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

4) நோயாளியை அடையாளம் தெரியாத நபர் ஒருவர் 24.2.2022 அன்று இரவு 11.00 மணியளவில் பர்மா காலனி என்னும் இடத்தில் அரிவாளால் தாக்கியதாக கூறியுள்ளார். அவருக்கு ஏற்கனவே தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில்முதல் உதவி சிகிச்சை அளிக்கப்பட்டிருந்தது.

5) அவருக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் இடது கழுத்தில் இருந்து கன்னம் வரை 15 தையலுடன் கூடிய காயம் காணப்பட்டது. காயத்தில் இருந்து சீழ் வடிந்தது. மூக்கின் மீது நான்கு தையல்கள் ஏற்பட்ட காயம் காணப்பட்டது. இடது நெற்றியில் ஒரு தையலுடன் கூடிய காயம் காணப்பட்டது. வாய்பகுதியில் ஒரு தையலுடன் கூடிய காயம் காணப்பட்டது.

6)நோயாளிக்கு விபத்து பதிவேடு எழுதி டாக்டர் ஷோபனா நோயாளியை உள்நோயாளியாக அனுமதித்து உள்ளார். அந்த விபத்து பதிவேடு இதுதான். அது **அ.சா.ஆ.1** ஆகும்.

7) பின்னர் நான் அந்த நோயாளிக்கு மேல்சிகிச்சை அளித்து அவருக்கு உள்ள காயத்தின் தன்மை குறித்து காயச்சான்று வழங்கினேன்.

8)

1) அவருக்கு 1செ.மீ. தையலிடப்பட்ட காயம் இடது நெற்றியில் காணப்பட்டது.

2) 1 செ.மீ. அளவில் தையலிடப்பட்ட காயம் வாய்பகுதியில் காணப்பட்டது.

3) 4 செ.மீ. அளவில் தையலிடப்பட்ட காயம் மூக்கின் மேல் காணப்பட்டது.

4) 15 செ.மீ. அளவில் தையலிடடப்பட்ட காயம் கழுத்தின் இடது பகுதியில் இருந்து கன்னம் வரை காணப்பட்டது.

5) இடது எச்சில் சுரப்பி (parotid) வெட்டுகாயம் காணப்பட்டது.

6) இடது இடது பக்க முக நரம்பில் காயம் ஏற்பட்டு இடது புற முக சதைகளில் பலவீனம் காணப்பட்டது.

7) 1 செ.மீ. அளவில் தையலிடப்பட்ட காயம் இடது கை நடுவிரலில் காணப்பட்டது.

1 , 2 மற்றும் 7 வது காயம் சாதாரண காயம் என்றும் 3 முதல் 6 வரை உள்ள காயங்கள் கொடுங்காயங்கள் என்று காயச்சான்று வழங்கியுள்ளேன். அந்த காயச்சான்று இதுதான். அது **அ.சா.ஆ.2** ஆகும்.

போலிசார் இது பற்றி என்னை விசாரித்தார்கள்.

1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) விபத்து பதிவேட்டில் நோயாளி சுயநினைவுடன் இருந்தாரா மயக்க நிலையில் இருந்தாரா என்பது பற்றி குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான்.

2) மேற்படி காயங்களில் தையலிடப்பட்ட காயங்களை தவிர மற்ற காயங்கள் வாகன விபத்தில் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் மிகவும் குறைவு. தையலிடப்பட்ட காயங்கள் எவ்வாறு ஏற்பட்டது என்று கருத்து கூறமுடியாது.

மறு விசாரணை

இல்லை..

VELMURUGAN P

Digitally signed by VELMURUGAN P
Date: 2026.03.16 16:04:43 +0530